மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையத்திற்கும் திருத் தலத்திற்கும் வேறுபாடு இருக்கவேண்டும். அதுவும் திருத்தலம் என்றால்—ஆறுபடை வீடுகளில் ஒன்றான முருகப் பெருமான் குடியிருக்கும் இடத்தை ஒரு வெறும் சுற்றுலாத்தலமாக ஆக்கக் கூடாது. அங்கே முக்கியமாக பக்தர்கள்தான் வர வேண்டும். சுற்றுலாப் பயணிகளும் அங்கே வரலாம். அங்கே வருபவர் களுக்கு முக்கியமான அடிப்படை வசதிகளைச் செய்து தரு வதற்கு அரசைக் கேட்கலாம். ஏற்கெனவே அரசு கோயிலுக் குள்ள இடத்தை மேம்பாடு செய்ய லட்சக்கணக்கான நிதி உதவி அளித்து வருகிறது.

(முற்பகல் 10-30)

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இந்தக் கோவிலுக்கு ஒளிவிளக்கு, மற்றும் சில மேம்பாட்டுப் பணிகளுக்காக 15 இலட்சம் ரூபாய் தேவையென்று கேட்டு மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

579—(வினா எண் 10055)* **திரு. கே. பாலாஜி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சி மாநகரத்தை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்காக யாத்திரி நிவாஸ் ஒன்று மத்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட உள்ளது. இதற்கு மத்திய அரசு ரூ. 34.00 இலட்சம் உதவி செய்ய ஆணை யிட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் பல்லவபுர சுற்றுலா வளாகம் கட்ட திட்டமிடப்

---

* 474-475 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

1987 மே 4]

பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு ரூ. 20.00 இலட்சம் அளிக்க ஆணையிட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் மத்திய அரசின் பராமரிப்பில் உள்ள சுற்றுலா மாளிகை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

580—(*வினா எண் 10418) திரு. எஸ். இராசாராமன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சுற்றுலா வளர்ச்சிக்காக ரூபாய் 30 இலட்சம் மைய அரசு வழங்கி உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டங்களுக்காக அத் தொகை செலவிடப்படுகிறது?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விரிவான அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு டி. ஆர். வேங்கடாமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரிவான அறிக்கையிலே 13-வது இலக்கத்தில் குற்றால உணவு விடுதியைக் காட்டி மத்திய அரசு அதற்கு ரூ. 5.44 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்திருப்ப தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். குற்றாலத்திலே ஒரு படகுத் துறையை அமைக்க வேண்டும் என்று சொல்லி அந்த படகுத் துறையின் அருகிலே இந்த உணவு விடுதியை அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிந்துமாதவன் அவர்களிடத்திலே ஆலோசனை சொல்லி அதனை அவரும் ஏற்றுக் கொண்டிருக் கிறார். அந்தப் படகுத் துறையைத் தமிழக அரசின் சார்பாக அமைக்க தமிழக அரசு முன்வருமா? கோடைக்கானலில் உள்ளதை விடச் சிறப்பாக horse-shoe, 'U' turn வடிவத்தில் அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிபாரிசு செய்திருக்கிறேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே படகுத் துறையை உடனடியாக இந்த சீசன் காலத்திலேயே அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.